RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.34256/ijot2135

# திருமந்திரத்தில் பணியாளரின் இறைநெறி

**பி. பாலச்சந்திரன் [அ], தி.ச. தர்மலிங்கம் [அ, *]**

[அ] மெய்யியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Thirumanthirathil paniyalarin Iraineri

**P. Balachandran [a], T.S. Dharmalingam [a, *]**

[a] School of Philosophy, Tamil University, Thanjavur – 613010, Tamil Nadu, India.

*Corresponding author Email: dharmalingamtu@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2135

Received: 13-06-2021; Revised: 29-07-2021; Accepted: 30-07-2021 Published: 31-07-2021

**Abstract:** Many thousands of years ago, Thirumular had guided today's employees to subject themselves to a spirit of service so that he and society could live in excellence through the mantra sacraments of this temple. In this article, the merits of Thirumanthiram, the virtues and practices of yoga, the speciality of Attanga Yoga, the use of Pranayama, women's degradation, lovelessness, the superiority of education, neutrality, toddy, periyaaraith thunaikkotal, orality, morality, impermanence, state justice, and pride are mentioned in its principles and moral activities. It is no exaggeration to say that Thirumanthiram is a great guide for society to act wisely in today's fast-growing situation. Thirumanthiram is the arumandram where the country and we prosper and guide.

**Keywords:** Thirumanthiram, Thirumular, Yoga, Mantra, Arumandram.

## முன்னுரை

உலக மக்கள் யாவரும் பேரின்ப வாழ்வு வாழ்ந்து பிறவா நிலையை அடைவதற்கான வழிமுறைகள் அனைத்தும் திருமூலர் அருளிய திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் திருக்குறளுக்கு ஒப்பான நூலாகவும் கருதப்படுகிறது.

## திருமந்திரம்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதின் மூலம் தான் பெற்ற இறையருளானது, தான் உணர்ந்து அறிந்துள்ள பேரின்ப ஞானமாகிய மறைபொருள் பற்றிய அறிவு, தன்னோடு சேர்ந்து வாழும் மக்களும் பெற்று உயர்வடைய வேண்டும் என்பதும், தனிமனித ஒழுக்கமே சமூகக் கட்டமைப்பின் அடித்தளம் என்பதும், அதுவே அறம் வளர்க்கும் பேரின்ப வாழ்வு என்பதும் திருமந்திரத்தின் கோட்பாடுகளில் முக்கியமானதாகும்.

## பணியாளர்

பணியாளர் என்பவர் நிர்வாகத்திறன் மிக்கவர், பொதுமக்கள், அலுவலர் ஆகியோருடன் இணைந்து செயல்படுபவர், அவர்களது தேவையறிந்து உண்மைநிலை அறிந்து உதவிடும் உள்ளம் உள்ளவராக திகழ்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளையும், நெறிமுறைகளையும் கடைப்பிடித்து சேவை மனப்பான்மையுடன் செயல்புரிபவர் எனலாம். பணியாளர் நெறி குறித்து திருமந்திரத்தில் கூறியுள்ள கோட்பாடுகள், அறநெறிச் செயல்கள் யாவற்றையும் காணலாம்.

### திருமந்திரத்தின் சிறப்பு

முதன்முதலாக தமிழில் யோகத்தை விரிவாக விளக்கிக் கூறியவர் திருமூலர்.

பின்னை நின்றுஎன்னே பிறவி பெறுவது

முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே (திரு.81)

எனும் பாடலில் தான் தவம் செய்திருந்தமையால் தன்னைப் பற்றித் தமிழில் நூல் செய்யும் வண்ணம் தனக்கு ஞானத்தை அளித்துச் சிவபெருமான் பிறவியைத் தந்தருளினான் என்கிறார். சைவ சித்தாந்த கருத்துக்களை விளக்கும் முதல்நூல் திருமந்திரமே ஆகும். இதில் முப்பொருள் உண்மையாகிய பதி, பசு, பாசம் என்பதைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. பக்தி இலக்கியம், சித்தர் இலக்கியம் மற்றும் இன்றுள்ள சித்த மருத்துவம், சோதிடம், யோகம், தியானம், வர்மம், அக்குபஞ்சர் போன்ற பயன்தரும் எந்த ஒரு அமைப்பாக இருந்தாலும் அனைத்திற்கும் தாயகமாக திருமந்திரம் உள்ளது. ஆன்மிகக் கல்விக்கான முதல் அடிப்படை நூலாகவும் உள்ளது.

### அன்புநெறி

அன்புதான் இறைவன், இறைவன் வேறு அன்பு வேறு அல்ல. இரண்டும் ஒன்றே எனக் கூறுகிறார் திருமூலர்.

ஒன்று அவன்தானே; இரண்டு அவன்இன்னருள்;

நின்றனன் மூன்றினுள்; நான்குஉணர்ந்தான்; ஐந்து

வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்

சென்றனன்; தான் இருந்தான் உணர்ந்துஎட்டே (திரு. 1)

எனும் கடவுள் வாழ்த்துப்பாடல் மூலம் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றினையும் உணர்ந்து மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் அடக்கி யோக நெறியான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்கினை, சகசிரதளம் எனும் சக்கரங்களை குறிப்பிட்டு பௌதீகப் பொருட்களான நிலம், நீர், காற்று, தீ, வான் ஆகியவற்றுடன் கதிரவன், சந்திரன், ஆன்மா எனும் எட்டுப் பொருள்களையும் உணர்த்திட வழி வகுத்துள்ளார்.

### யோகத்தின் சிறப்பு

யோகம் உடல் நலனுக்கு மிகவும் தேவையானது. இப்பயிற்சியால் உடலும் மனமும் நலம் பெறும், நோய் அகலும், ஆயுள் நீடிக்கும். யோகம் மனதையும் அதன் தத்துவத்தையும் நன்கு புரிந்து கொண்டு ஒருநிலைப்படுத்துவது ஆகும். இராசயோகம், அடயோகம், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், மந்திரயோகம், கீதயோகம், வேள்வியோகம் என யோகம் பல வகைப்படுகின்றது.

அட்டாங்க யோகம்

இயம நியமமே எண்ணிலா ஆதனம்

நயமுறு பிராணாயாமம் பிரத் தியாகாரம்

சயமிகு தாரணை தியானஞ் சமாதி

அயமுறும் அட்டாங்க மாவது மாமே. (திரு. 552)

இப்பாடல் அட்டாங்க யோகத்திற்கு இலக்கணமாக கருதப்படுகிறது. தீதகற்றல் என்ற இயமம், நன்றாற்றல் என்ற நியமம், அளவிலா இருக்கை என்ற ஆசனம், வளிநிலை என்ற பிராணாயாமம், தொகைநிலை என்ற பிரத்யாகாரம், பொறைநிலை என்ற தாரணை, ஒன்றுதல் என்ற தியானம், நொசிப்பு

என்ற சமாதி ஆகிய எட்டும் அட்டாங்க யோகம் ஆகும். அட்டாங்கயோகத்தின் பயனைக் கூறும்போது இயமத்தால் அமராபதிக்கே செல்வர், நியமத்தால் சிவபதம் சேர்வர். ஆசனத்தால் அமராபதிச் செல்வன் ஆவர், பிராணாயாமத்தால் சிவகதி சென்று எய்துவர், பிரத்தியாகாரத்தால் அரனாவர், தாரணையால் நமன்வழி மாற்றுவர், தியானத்தால் மும்மூர்த்திகளும் தன்னிடமாவர் எனத் திருமூலர் கூறுகிறார்.

## பிராணாயாமம்

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்

ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்

ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்

மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே. (திரு. 568)

பதினாறு மாத்திரை அளவு இடப்பக்கத்தில் உள்ள நாசித் துளையில் காற்றை உள்ளிழுத்தல் பூரகம், அறுபத்து நான்கு மாத்திரை அளவு இழுத்த காற்றை உள்ளே நிறுத்துதல் கும்பகம், முப்பத்திரண்டு மாத்திரை காலஅளவு வலப்பக்கம் துளையில் காற்றை மெல்ல விடுவது ரேசகம், முன்னே சொல்லிய முறைக்கு மாறான வலப்பக்கம் நாசித் துளையில் காற்றை இழுத்து நிறுத்தி இடப்பக்க நாசித் துளையில் விடுதல் வஞ்சகம் என பொருள் வழங்கப்படுகிறது. மூச்சினை கவனித்து செயல்பட்டால் மரணபயம் இல்லை எனப்படுகிறது.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்

பளிங்கொத்தக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்

தெளியக் குருவின் திருவருள் பெற்றால்

வளியினும் வேட்டு அளியனு மாமே. (திரு. 569)

எனும் பாடல் மூலம் பிராணாயாமப் பயிற்சி செய்பவன் காற்றை இழுத்துத் தன்வசப்படுத்தி அடக்கியிருந்தால் உடல் பளிங்கைப்போல் மாசு இல்லாது தூய்மையுடையதாய் முதுமையடைந்தாலும் இளமைத் தோற்றம் உண்டாகும் எனப்படுகிறது. அகத்தவப் பயிற்சியினால் முதுமையிலும் இளமையுடன் இருக்கலாம். இளமையில் அகத்தவப் பயிற்சி மேற்கொள்வதனால் முதுமையை தள்ளிப் போடலாம் எனவும் கூறப்படுகிறது.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப் பட்டவர்க்கு. (குறள். - 269)

எனும் குறள் மூலம் தவம் செய்து மேலான ஆற்றலைப் பெற்றவர் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுதல் முடியும் எனப்படுகிறது.

## மகளிர் இழிவு

இன்றைய காலகட்டத்தில் பணி செய்யும் இடங்களில் ஆண்களால் பலவிதமாக பாலியல் கொடுமைகளுக்கு ஆட்படுவதால் பெண்ணினம் பாதிப்பிற்குள்ளாகிறது. அதனை தடுத்திட அறிஞர் பெருமக்கள் பல்வாறான அறிவுரைகள் வழங்கியும் இவ்வாறான தவறுகள் தொடர்கின்றன. இது குறித்து பல் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமது பாடல்கள் மூலம் பொது மகளிரின் இழிவு குறித்து சுட்டிக் காட்டியுள்ளார்.

இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்

குலைநல ஆம்கனி கொண்டு உணல்ஆகா

முலைநலம் கொண்டு முறுவல் செய்வார்மேல்

விலகுறும் நெஞ்சினை வெய்துகொள் ளீரே. (திரு. 204)

பெண்ணின் கவர்ச்சியில், அவர்தம் புன்னகையில் மன உறுதியை இழக்கக் கூடாது. அவர்கள்பால் செல்லும் மனத்தை அடக்கி நன்னெறியில் நடத்தல் வேண்டும். மனைவியால் அடைவதே இன்பம், பெண்களிடம் நீடித்த இன்பத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனமான செயல் என்கிறார்.

பெண்ணின் பெருமையை உணரும் வகையில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனவளக்கலை மன்றங்களில் ஆகஸ்ட் 30ஆம் தேதியை மனைவி நல வேட்பு நாளாக கொண்டாட வழிவகுத்து குடும்ப வாழ்வில் எல்லாவிதமான துன்பங்களையும், பொறுப்புகளையும், கடமைகளையும் சுமந்து கொண்டிருப்பதில் ஆண்களை விடப் பெண்கள்தாம் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறார்கள் எனவும் பெண்ணினத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை நீக்கி, பெண்மையின் உயர்வை, சிறப்பை மதித்து, பெண்மைக்குப் பாதுகாப்பும், பராமரிப்பும் அளிக்க வேண்டியது ஆண்களின் கடமையாகும் என உணர்த்துகிறார்.

## அன்புடைமை

பணியாளர் என்பவர் அறநெறியுடன் மக்களிடத்து அன்பு கொண்டவராக திகழ்தல் வேண்டும். அன்பும், பண்பும் பணிகளை எளிமையுடன் ஆற்றிட வழிவகுக்கும்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே. (திரு.252)

இப்பாடல் மூலம் பிறரிடம் இனிய சொற்களைப் பேசுதல் யாவர்க்கும் முடியக் கூடிய செயலாகும் என திருமூலர் கூறுகிறார். புன்முறுவலுடன் இனிய முகத்துடன் தமது கடமையை ஆற்றல் பணியாளரின் மனப்பாங்காக கொளல் வேண்டும்.

## கல்வியின் மேன்மை

பணியாளர் என்பவர் தமது பணிக்கான கல்வியறிவை பெற்றவராகிறார். அவர் தம் பணிக்காலத்தில் கல்வியில் மேன்மை பெற்று தமது அறிவினை பெருக்கிக் கொண்டால் பல்துறை ஆளுமைப் பேறு கிடைக்கும்.

கற்றறி வாளர் கருதிய காலத்துக்

கற்றறி வாளர் கருத்தில் ஓர்கண்உண்டு

கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்

கற்றறி காட்டக் கால்உள ஆக்குமே. (திரு. 291)

இப்பாடல் மூலம் உண்மையான கல்வியைக் கற்றவருக்கு ஞானக்கண் புலனாகும் என திருமூலர் கூறுகிறார்.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது

கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று

கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்

கல்லாத மூடர் கருத்து அறியாரே. (திரு. 317)

எனும் திருமந்திரப் பாடலில் கற்று அனுபவமில்லாத மூடரை பார்த்தலும் அவர் சொல் கேட்டலும் வேண்டாதது என்பதனை கல்லாத மூடரால் சமுதாயம் கருத்தழிந்து சீர்குலையும் எனக் கூறப்படுகிறது.

## நடுவுநிலைமை

பணியாளர் என்பவர் நடுவுநிலைமையுடன் பணியாற்றுதல் வேண்டும். அவ்வாறு செயல்படுவதால் சமுதாயத்தில் உயர்ந்து காணப்படும் நிலை எழும். நியாயம், அநியாயம் இவை இரண்டையும் ஆய்ந்து நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும்.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை

நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை

நடுவுநின் றார்நல்லதேவரு மாவர்

நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே. (திரு. 320)

இப்பாடல் மூலம் நடுநிலை தவறாமல் அறவழியில் நின்றவர்கட்கு ஞானம் கிட்டும் என்றும் துன்பம் அற்று தேவநிலையை அடைவர் எனவும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. நடுவுநிலைமையுடன் செயல்படுகையில் சமுதாயத்தில் நற்பெயரும் தமது பணியில் ஒழுக்கமும், பாரபட்சமற்ற செயல் திறனும், மக்கள் சேவையும் அதிகரிக்கும். மக்கள் நலம் காண, சீரிய தொண்டாற்றிட நடுவுநிலைமை ஓர் சீரிய வழிமுறையாகும்.

## கள்ளுண்ணாமை

சமுதாய சீரழிவிற்கு வழிவகுக்கும் கள்ளுண்ணாமையை யாவரும் கடைபிடித்தல் வேண்டும். இன்றைய நாகரீக உலகிலே கள்ளுண்ணுதல் ஓர் பெரிய நிகழ்வாக கொண்டாடப்படுகிறது. இதனால் மக்களின் வாழ்வில் பின்னடைவும், வன்முறைக்கு வழிவகுக்கும் நிலையேற்றப்படுகிறது. இப்பழக்கம் இல்லா மனிதனின் வாழ்வில் அமைதியும் அன்பும் மிகும்.

கழுநீர் பசுப்பெறில் கயிந்தொறும் தேரா

கழுநீர் விடாய்த்துத் தம்காயம் சுருக்கும்

முழுநீர்க் கள்உண்போர் முறைமை அகன்றோர்

செழுநீர்ச் சிவன்தன் சிவானந்தத் தேறலே. (திரு. 324)

இப்பாடல் மூலம் மதுவை அருந்துபவர், ஒழுக்கத்தினின்று விலகியவர் என திருமூலர் கூறுகிறார்.

## பெரியோரைத் துணைக்கோடல்

பெரியாரைத் துணைக்கோடல் என்பதில் மூத்த பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களின் உதவிகளைக் கேட்டு பணியாளர்கள் பயனடையலாம். முன் அனுபவம் பெற்றவர்கள் சிறந்த வழிகாட்டியயாவர்கள்.

அருமறைவல் லோன்கலை ஞானத்துள் தோன்றும்

பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்

உரிமைவல் லோன்உணர்ந்து ஊழி இருக்கும்

திருமைவல் லாரோடு சேர்ந்தனன் யானே. (திரு. 548)

உலக மக்களின் வாழ்வில் இல்லற ஞான வாழ்க்கைக்கு ஏணியாக இருப்பவர்கள் அனுபவமிக்க பெரியவர்கள் என திருமந்திரம் கூறுகிறது.

## வாய்மை

பணியாளர் என்பவர் உண்மைகளைப் பேசி நற்பணிதனை ஆற்றிடல் வேண்டும். வாய்மையை

கடைபிடித்து அறச்சிந்தனையுடன் செயல்படின் சிறந்த சேவைதனை செய்து வாழ்வில் மேலோங்கும் நிலை எழும்.

அருள்பெற்ற காரண மென்கொல் அமரில்

இருளற்ற சிந்தை இறைவனை நாடி

மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்

பொருளுற்ற சேவடி போற்றுவார் தாமே. (திரு. 2599)

எனும் திருமந்திரப் பாடல், மனமது மாசற்றதன்றோ அறம். அது கலவாதிருக்க வேண்டுமே என வாய்மையை வலியுறுத்துகிறது. தூய்மையாம் விளைவு தரும் சொற்கள் அனைத்தும் வாய்மையே. அவை வாழ்வின் வளம் காத்துச் சிறப்பளிக்கும் எனவும் உள்ளதை உணர்தல், நல்லதை செய்தல், அல்லவை தவிர்த்தல் என்பது வாய்மை என வேதாத்திரியம் வலியுறுத்துகிறது. பணியாளர் என்பவர் எண்ணம், சொல், செயல் யாவற்றிலும் வாய்மையை கடைபிடித்து வாழ்ந்தால் தன்னிலை உயர்ந்தும், பிறர்நலனில் தன்னலம் காணும் உயர் பண்புடன் திகழ்வர்.

## ஒழுக்கம்

மனிதன் என்பவன் புகழுக்கு மயங்கி தன்னிலை மறந்து ஒழுக்கம் இன்றி வாழும் நிலை எழா வண்ணம் வாழ்ந்து காட்டிடல் வேண்டும் என்ற கருத்து பல அறிஞர்களால் வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறே பணியாளர் என்பவர் ஒழுக்கச் சீலராய், கடமையுணர்வு தவறாதவராய் வாழ்தல் வேண்டும்.

விழுப்பமும் கேள்வியும் மெய்நின்ற ஞானத்து

ஒழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது

வழுக்கி விடாவிடில் வானர் கோனும்

இழுக்கின்றி எண்ணிலி காலமது ஆமே. (திரு. 305)

இப்பாடல் மூலம் புகழும், பெருமையும் கல்வியறிவும், மெய்ஞ்ஞான மேன்மையும் உயர்ந்த வாழ்க்கை நெறியும், அறிவும், மனமும் பெற்று வாழ்தலே ஒழுக்கம் எனப்படுகிறது.

செய்தானறியுஞ் செழுங் கடல் வட்டத்துப்

பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்

மெய்தான் உரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்

மைதாழ்ந் திலங்கு மிடதுடை யோனே. (திரு. 2068)

இப்பாடல் மூலம் திருமூலர் கூடா ஒழுக்கம் பற்றி கூறுகிறார். நன்றில் நிற்பதும் தீதில் விலகுதலும் அறிவுடையோர் தொடர்ந்து செய்வர் என ஒழுக்கத்தினை ஒழுகி வாழ்தலை சுட்டிக்காட்டி உள்ளார்.

இன்பம் இல்லையென்றாலும் துன்பமில்லாமல் வாழ்வதற்குத் தூய்மையான எண்ணங்களை நாமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும், அதற்கு மன ஒர்மையும், மனத்தூய்மையும் வேண்டும் என வேதாத்திரி மகரிஷி கூறுகிறார்.

## நிலையாமை

இவ்வுலகில் யாதும் நிலையன்று, ஆதலால் பொருட்பற்று மிகக் கொண்டு லஞ்சம் போன்ற பலவித தவறுகள் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது குறித்து திருமூலர் தமது பாடலில்,

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்

பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்

சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு

நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தாரே. (திரு. 145)

ஒருவரின் உயிர் பிரிந்தபின் அவரது பெயர் கூறப்படுவதில்லை. பிணம் எடுத்துவிட்டார்களா என்று கேட்பதை உணரும் நாம் ஒழுக்க நெறியைப் பின்பற்றி உலகப் பொருட்களின் நிலையாமையை உணர்ந்து ஒழுக்க நெறியைக் கடைபிடிக்க வேண்டும் என திருமூலர் கூறுகிறார். எனவே பணியாளர்கள் பொருட்பற்றில் அதிக ஈடுபாடின்றி சேவை மனப்பாங்குடன் செயலாற்றி, பிறர் நலத்தில் தன் நலத்தை காணல் வேண்டும்.

## அரசநீதி அறிதல்

நீதியை நிலைநாட்டுபவனே சிறந்த அரசனாக கருதப்படுவார். ஓர் அரசன் என்பவன் சிறந்த அரசு நீதியை கற்றவனாக இருக்க வேண்டும். எனவே பணியாளர் என்பவர் அரசின் விதிமுறைகள், தெளிவுரைகள், யாவும் நீதிநெறியுடன் செயல்படுத்த வேண்டும். நீதி வழுவாது நேர்மையுடன் செயல்படும்போது மக்கள் சேவையில் உயர்ந்தும் மக்கள் போற்றிப் புகழும் நிலைக்கு உட்படுத்தப்படுவர்.

கல்லா அரசனும் காலனும் நேர்ஒப்பர்

கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்

கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்

நல்லாரைக் காலன் நணுக நில்லானே. (திரு. 238)

இப்பாடல் மூலம் திருமூலர் கூடா ஒழுக்கம் பற்றி கூறுகிறார். நன்றில் நிற்பதும் தீதில் விலகுதலும் அறிவுடையோர் தொடர்ந்து செய்வர் என ஒழுக்கத்தினை ஒழுகி வாழ்தலை சுட்டிக்காட்டி உள்ளார்.

இன்பம் இல்லையென்றாலும் துன்பமில்லாமல் வாழ்வதற்குத் தூய்மையான எண்ணங்களை நாமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும், அதற்கு மன ஓர்மையும், மனத்தூய்மையும் வேண்டும் என வேதாத்திரி மகரிஷி கூறுகிறார்.

## நிலையாமை

இவ்வுலகில் யாதும் நிலையன்று, ஆதலால் பொருட்பற்று மிகக் கொண்டு லஞ்சம் போன்ற பலவித தவறுகள் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது குறித்து திருமூலர் தமது பாடலில்,

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்

பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்

சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு

நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தாரே. (திரு. 145)

ஒருவரின் உயிர் பிரிந்தபின் அவரது பெயர் கூறப்படுவதில்லை. பிணம் எடுத்துவிட்டார்களா என்று கேட்பதை உணரும் நாம் ஒழுக்க நெறியைப் பின்பற்றி உலகப் பொருட்களின் நிலையாமையை உணர்ந்து ஒழுக்க நெறியைக் கடைபிடிக்க வேண்டும் என திருமூலர் கூறுகிறார். எனவே பணியாளர்கள் பொருட்பற்றில் அதிக ஈடுபாடின்றி சேவை மனப்பாங்குடன் செயலாற்றி, பிறர் நலத்தில் தன் நலத்தை காணல் வேண்டும்.

## பெருமை

மக்களிடம் வேறுபாடு ஏதுமில்லை. உயர்வு, தாழ்வு ஏதும் காணுதல் தவறு. பணியாளர் என்பவர் அனைவரையும் பேதமின்றி பார்த்து நடுவுநிலைமையுடன் தமது சேவையை செய்தல் வேண்டும்.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டினை தவிர்த்து அனைவரையும் சமமாக நடத்தி தம் பணிதனை ஆற்றிட வேண்டும். இதனால் பெருமை மேலோங்கும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினைமின் நமனில்லை நாணாமே

சென்றே புகும்கதி யில்லைநுஞ் சித்தத்து

நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. (திரு. 2104)

குலம்; ஒன்றே, இறைவன் ஒருவன் தான், நல்லனவற்றை நினையுங்கள் என்ற கருத்தினை திருமந்திரம் வலியுறுத்துகிறது.

## முடிவுரை

பணியாளர் என்பவர் மக்களின் சேவையை செய்யும் ஓர் நற்பண்பாளராவார். பல லட்சம் பேர் போட்டியிடுகையில் ஒரு சில ஆயிரம் பேரே தேர்வு செய்து பணியமர்த்தப் படுகிறார்கள். அவ்வாறிருக்கையில் அவர் யாவரும் இறையருள் பெற்றவர்கள் எனலாம். அன்புநெறி, மகளிர் இழிவு, அன்புடமை, கல்வியின் மேன்மை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை, வாய்மை, ஒழுக்கம், நிலையாமை போன்ற அதிகாரங்களில் திருமூலர் திருமந்திரத்தில் வாழ்வியல் நெறியை உணர்த்துகிறார். பணியாளர்கள் திருமந்திரத்தில் குறிப்பிடப்படும் அட்டாங்க யோகப் பயிற்சிகளை மேற்கொண்டும், வேதாத்திரி மகரிஷி கூறும் எளிய முறை உடற்பயிற்சிகள், அகத்தவம், அகத்தாய்வு போன்றவற்றைப் பயின்றும் உடல்நலம், மன நலம், அறிவு நலம் மேலோங்கி வாழ்ந்திட முயலுதல் வேண்டும். இன்பமும், துன்பமும் நிறைந்த மனித வாழ்க்கையை இன்பமாகவே வாழ முடியும் என்பதை திருமந்திரம் உறுதி செய்கிறது. திருமந்திரத்தில் கூறப்பட்ட ஒன்றே குலம், ஒருவனே **தேவன்** எனும் கருத்துக்கேற்ப, சாதி, சமய பாகுபாடின்றி செயல்படும் எண்ணம் மேலோங்கி தீய எண்ணங்களை தவிர்த்து செயலாற்ற வேண்டும். உண்மையில் எதிரி உனக்கு உண்டு எனில் உள்ளத்தில் எழும் ஒழுங்கற்ற எண்ணமே அதுவே தீய எண்ணம் என வேதாத்திரியம் கூறுகிறது. தான், தனது என்ற எண்ணங்களைத் தவிர்த்து தன்முனைப்பினை கைவிட்டால் தனித்தோங்கலாம். பணியாளர் சமூக நலனில் அக்கறையுள்ளவராகவும், சேவை மனப்பான்மை கொண்டவராகவும் திகழ்தல் வேண்டும். பணியாளர்கள் இனியவை கூறி மக்களின் இன்னல்களைத் தீர்த்து வாழ்தலே நல்லறம். பணியாளர் நெறிமுறைகள் குறித்த கருத்துக்கள் திருமூலர் அருளிய திருமந்திரத்தில் சிறப்புடன் இடம் பெற்றுள்ளன. நாமும் நலம் பெற்று, நாடும் நலம் பெற்று, உலகம் உய்ய வழிகாட்டும் அருமந்திரம், திருமந்திரம் ஒன்றே என்பது வெள்ளிடை மலை.

## References

Azhagar Nambi, (2016) Thirumanthiram Moolamum Uraiyum Volume 1, 2, 3, Kavitha Publication, Chennai, India.

Mahalakshmi, T., (2014) Thirumanthiramum Vazhvialum, World Tamil Research Center, Chennai, India.

Mahalakshmi, T., (2018) Thirumanthirathil Attanga Yogam, International Institute of Tamil Studies, Chennai, India.

Mahalakshmi, T., Thirumanthiramum Yogamum.

Mahalakshmi, T., Thirumanthirathil Aanmiga Neriyum.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Authors declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

**About the License**

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

P. Balachandran & T.S. Dharmalingam, Thirumanthirathil paniyalarin Iraineri, Indian Journal of Tamil, 2(3) (2021) 26-34. https://doi.org/10.34256/ijot2135